THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

APRIL, 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஏப்ரல், 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர்:—A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.
உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
மானேஜர்:—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211 தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி:—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A சாமுவேல் ஐயர், பசுமலை. (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்.

1. அத்தியட்சரின் கடிதம்.
2. திருச்சபைச் செய்திகள்.
3. " மதம் அவசியமா "?
4. பிரசங்கக் குறிப்புகள்
5. சிறுவர் பாகம்.
6. இயேசுவின் ஜெபப்பள்ளி.
7. பாப்புவா மிஷனரி சங்கம்.
8. மதிப்புரை.
9. கி.மு. சங்கப் பொருட்கள்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV   பசுமலை, ஏப்ரல் 1954   இலக்கம் 6

வருடசந்தா: 1 ரூ. 8 அணா. தபால்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாகுளம், மதுரை,
மார்ச்சு 31, 1954.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

தென் இந்திய ஐக்கிய சபை பிரதிநிதிகளுக்கும், லுத்தரன் சபை பிரதிநிதிகளுக்கும் இந்தமாதத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அபிவிருத்தி காணப்பட்டதை சந்தோஷத்தோடே தெரிவிக்கிறேன். ஐந்து நாட்கள் செலவிடப்பட்டன அந்நாட்களில் விசுவாசம் கொள்கைகளில் காணப்படுகிற பேதங்களைப்பற்றி ஆராய்ந்தோம். விசுவாசத்திற்குரிய எல்லா முக்கியமான காரியங்களிலும் ஒருமனம் இருந்தது என்பதைக் கண்டோம். கடவுளுடைய ஆவியானவர் எங்களோடேகூட இருந்தார் என்றும், இனி முழு ஐக்கியத்திற்குள் எங்களை வழிநடத்துவார் என்றும் நம்புகிறோம். அச்சமயத்தில் நீங்கள் ஏறெடுத்த விண்ணப்பங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

அதே சமயம் ஸினடு நிர்வாகக் கமிற்றி கூடி கனம் ஆர். விப் ஐயரவர்களை வடகேரள அத்தியட்சராக நியமனம் செய்தது. இவர் பாஸில் (Basel) மிஷனைச் சேர்ந்த மிஷனரி தென் ஜெர்மனியைச் சேர்ந்த லுத்தரன். ஏப்ரல்மீ 21உ கள்ளிக்கோட்டையில் இவர் அபிஷேகம் செய்யப்படுவார். அவருக்காகவும் அவருடைய அத்தியட்சாதீனத்திற்காகவும் ஜெபியுங்கள். நமது ஜெபம் அவருக்குத் தேவை.

இதுவரை 18 ஸ்தோத்திர விழாக்களில் பங்கெடுத்திருக்கிறேன். அநேக இடங்களில் உற்சாகத்திற்குரிய அறிகுறிகள் காணப்பட்டன. சில பாஸ்டரேட்டுகள் இந்த ஒழுங்குகளை இன்னும் செய்யாதது விசனம். பஞ்சகாலங்களில் ஏற்பட்ட கடனை நிவிர்த்திக்க சபையின் ஒவ்வொரு அங்கத்தினருடைய ஒத்துழைப்புத் தேவை.

பெரிய வெள்ளி, உயிர்த்தெழுந்த திருநாட்களைக் கொண்டாடுவதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பெரிய வெள்ளியில் நமதருள்நாதருடைய பாடு மரணத்தை மும்மணி தியானமாகக் கொண்டாடுவது அநேக சபைகளில் வழக்கம். இது நல்ல வழக்கம். ஆனால் இருவிதங்களில் இவ்வாராதனைகள் பயன்படாமற் போகிறதென விசனிக்கிறேன். முதலாவது அதிகமாய்ப் பேசுகிற வழக்கம் இருக்கிறது. இப்படிப்பட்ட காலங்களில் அதிகமாய்ப் பேசுவதைவிட அமைதலான ஜெபம் நல்லது. இரெண்டாவது நமதாண்டவருடைய பாடுகளைப்பற்றிப் பேசும்போது அவர்மேல் இரக்கம் காட்டவேண்டும் என்பதுபோல பாவிக்கிறோம். இது பெரும் தவறு. சிலுவையில் நமதருள்நாதர் பாடுபட்டபோது சாத்தானை அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி வெற்றிவேந்தராய் விளங்கினார். சிலுவையில் அவர் ஒரு பெரிய ஜெயவீரன்.

சிலுவைப்பாடுகளின் தியானத்தின் மூலமாய் அவர் அங்கு அடைந்த பெரிய ஜெயத்தின் தன்மையை விளங்கிக்கொள்வதோடு சாத்தானோடு எவ்விதமும் சமரஸப்படுவது வெட்கத்துக்கிடமான காரியம் என்று அவர் நமக்காக செய்து முடித்த ஈவுகளுக்காக நன்றிபாராட்டவும் வேண்டும்.

பெரிய வெள்ளிக்குப்பின் கல்லறையின் அதிசயமான அமைதியும், அதின்பின், உயிர்த்தெழுந்த காலையில் "கர்த்தர் உயிர்த்தெழுந்தார்" என்ற உன்னதமான நற்செய்தியையும் கேட்கிறோம். அவர் உயிர்த்தெழுந்ததினால் நமக்கு நன்நம்பிக்கை உண்டு—நரகத்தின் சத்துவங்களெல்லாம் தோற்கடிக்கப்பட்டன. அவர் உயிர்த்தெழுதலின் வல்லமை நமக்குள் கிரியை செய்து நம்மிலிருந்து எடுக்க முடியாத சந்தோஷத்தைத் தருகிறது. அந்தச் சந்தோஷம் இந்தத் திருநாளின்போது முழுவதும் உங்களோடிருப்பதாக.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

ஏப்ரல்	11	கீழவாசல் திடப்படுத்தல்
		மதுரை சுயேட்சை ஊழியர் கூட்டம்
,,	14	மண்டபசாலை ஸ்தோத்திர விழா
,,	15	செவல்பட்டி ,, ,,
,,	16—18	மதுரை திவ்விய பொறுமையின் ஆலயம்

ஏப்ரல்	20—21	கள்ளிக்கோட்டை—வடகேரள அத்தியட்சர் கனம் விப் ஐயர் அவர்களுடைய அபிஷேகம்
,,	22—26	பெங்களூர்—சுவிசேஷ ஊழிய ஆலோசனைக் கூட்டம்
,,	27	திருமறையூர் நிர்வாகக் கமிற்றி மதுரை
,,	28—29	இராமநாதபுரம்—ஞானபோத ஸ்தாபனக்கூட்டம்
	30	தமிழ் பிராந்திய ஆராதனைக் கமிற்றி
மே	1	அருப்புக்கோட்டை ஸ்தோத்திர விழா
	2	,, திடப்படுத்தல் மதுரை மேலவாசல் ஸ்தோத்திர விழா
	3—14	கொடைக்கானல்

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருநாட்கள்.

மே	1உ	பரி. பிலிப்பு, பரி. யாக்கோபு திருநாள்.
	2	உயிர் திரு பின் ஞாயிறு 2.
	9	,, 3.
	16	,, 4.
	23	,, 5.
	27	பரத்துக் கேறின திருநாள்.
	30	பரமேறின ஞாயிறு.

2. சிறந்த சுயேட்சை ஊழியர்.

"நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத் திருப்பேன்"

இவ்வுலகத்தில் கர்த்தருக்கென்று, திருச்சபையில் திருப்பணி விடை செய்பவரும் உண்டு. அரசாங்க உத்தியோகம் செய்தும் தமது கிறிஸ்தவ திருப்பணிவிடையை அமைதலுடனும் தாழ்மையுடனும் செய்பவர் சிலர் உண்டு. அப்படிப்பட்டவர்களில் ஒருவர் காலஞ் சென்ற டாக்டர் எ. மோபர்லி என்பவர்.

திருமங்கலத்தைச் சேர்ந்த சாத்தங்குடி என்னும் கிராமத்தில் 1899ம் வருஷத்தில் பிறந்து வளர்ந்தவர். பசுமலை உயர்தரப் பள்ளியில் படித்த பின்னர், சென்னை கால்நடை கலாசாலையில் பயிற்சி பெற்று, 1927ம் வருஷம் முதல், அரசாங்க உத்தியோகஸ்தராய் இருந்து வந்தார்.

அவருடைய வேலையில், ஒழுங்கும் உண்மையும், ஏழைகளுக் கிரங்கும் தன்மையும், வாயில்லா ஜீவபிராணிகளிடத்தில் விசேஷித்த கருணையும் காட்டும் தன்மையும எப்பொழுதும் விளங்கின தேவ நாமத்தின் பேரில் வரும் எவரையும் பொருட்படுத்தாதிருக்கமாட் டார். அவர்கள் தேவையைக் குறித்து அசட்டையாயிருக்கவும் மாட்டார்.

1952ம் வருஷம் தஞ்சாவூர் ஜில்லா புயலால் தாக்கப்பட்ட பொழுது இவர் நன்னிலத்தில் இருந்தார். புயலில், தங்கள் பொருள் களைப்பற்றிக் கவலையாயிருந்தனர் அநேகர். ஆனால் இவரோ, இரண்டு மைல் தூரத்திலிருந்த கோவிலைப்பற்றிய கவலையுடையவராயிருந்தார். புயல் ஓய்ந்தவுடன், அங்கு சென்று, அங்குள்ள, வேதாகமங்கள், பாட்டுப் புத்தகங்கள் முதலியவற்றைப் பத்திரம்பண்ணி, தன் செல வில் அக்கோவிலையும் பழுது பார்த்தார்.

தன் குடும்பத்திலும், இனத்தார் மத்தியிலும், உத்தியோகத் துறையிலும் ஓர் உத்தமக் கிறிஸ்தவனாக விளங்கினார். மார்ச் 15ம் தேதி, தாம் கொடுக்கும நித்திய இளைப்பாறுதலில் சமாதானமாய்ப் பிரவேசிக்கும்படி கர்த்தர் அவரை அழைத்துக்கொண்டார். கடவுள் தாமே, அவர் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தகுந்த ஆறுதலும் சமாதானமும் கொடுக்கும்படி ஜெபிப்போமாக என்று பெரியகுளம கனம் டேவிட் அம்மாள் எழுதுகிறார்கள்.

3. மதுரை வேதாகமக் கிளைச்சங்கத்தின் மூன்றுவது யூபிலி விழா

கடவுளுடைய கிருபையால், மதுரையில் வேதாகம சங்கத்தின் மூன்றுவது யூபிலி விழா 1954ம் ஹு பெப்ரவரி மீ 28ம்வ முதல், மார்ச் மீ 7ம்வ வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பெப்ரவரி மீ 28ம்வ ஞாயிறில் ஒவ்வொரு சபையிலும், பாடசாலையிலும் ஆரம்ப வேதாகம பரீட்சை நடைபெற்றது. ஏறக்குறைய 1000 பேர் இப்பரீட்சைகளில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. ஆரம்ப பரீட்சையில் ஒப்பேறிய முதல் இருவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மார்ச் மீ 2ம்வ செவ்வாய் மாலை 6 மணிக்கு அமெரிக்கன் காலேஜில், அவர்களுக்கு முடிவு பரீட்சை நடைபெற்றது, தவிர "ஜீவ ஒளி" என்ற கடித முறை வேத ஆராய்ச்சி பிரதிகள் ஒவ் வொரு சபையிலும் விநியோகிக்கப்பட்டது. மார்ச் மீ 6ம்வ சனிக்கிழமை மாலை 6 : 30 மணிக்கு அமெரிக்கன் காலேஜ் ஹாலில் "வேதாகமம் நமக்குக் கிடைத்தது எப்படி ?" என்ற பொருளின் மீது கனம் D. A. கிரகரி ஐயரவர்கள் படக்காட்சியோடு ஒரு சிறந்த உபந்நியாசம் நிகழ்த்தினார்கள். மார்ச் மீ 7ம்வ ஞாயிறு காலை 8 : 30 மணிக்கு ஒவ்வொரு சபையிலும் வேதாகம சங்க யூபிலி ஆராதனை நடைபெற்றது. அன்று மாலை 5 மணிக்கு சுமார் 4 பர்லாங்

ளேமுடைய ஆண்கள், பெண்கள் பிள்ளைகள் அடங்கிய ஒரு பெரிய பவனி U.C. உயர் நிலைப்பள்ளியிலிருந்து, பாட்டுகள், கீதவாத்தியங்கள் வேதாகம வசனங்கள் எழுதிய அட்டைக்கார்டுகள், கொடிகளோடு புறப்பட்டு, மதுரை மாநகரின் முக்கிய வீதிகள் வழியாய் நகர்ந்து அமெரிக்கன் காலேஜை அடைந்தது. மதுரை வேதாகம கிளைச் சங்கத்தின் தலைவராகிய நமது அத்தியட்சரவர்கள், லுத்தரன் சபையார், பசுமலை சபையார், குருமார் இப்பவனியில் பங்கெடுத்தது கவனிக்கத்தக்கது. மெய்யாகவே புறமதஸ்தர் மத்தியில் இப் பவனி கிறிஸ்துவுக்கு ஓர் சாட்சியாக விளங்கினது. பின் மாலை 7 மணிக்கு அமெரிக்கன் காலேஜ் ஹாலில் ஒரு விசேஷித்த ஐக்கிய ஆராதனை நடைபெற்றது காலேஜ் ஹால் இடங்கொள்ளாமற் போனது ஆச்சரியமல்ல நமது அத்தியட்சரவர்கள் ஆராதனையை நடத்த, திருநெல்வேலி அத்தியட்சரவர்கள் விசேஷித்த பிரசங்கம் செய்தார்கள். ஆராதனைக்குப்பின்பு வேதாகம பரீட்சையில் வெற்றி பெற்றோருக்கு பரிசுகளும், நற்சாட்சிப்பத்திரங்களும், திருநெல்வேலி அத்தியட்சரவர்களால் வழங்கப்பட்டு, இவ்வைபவங்கள் யாவும் இறைவனருளால் இனிது முடிந்தது. வேதாகம சங்கத்து டிக்கட் புஸ்தகங்களின் விற்பனை மூலம் பணம் சேகரிக்கப்பட்டு, வேதாகம சங்கத்திற்கு அனுப்பப்பட்டது என்று மதுரை வேதாகமக் கிளைச் சங்க காரியதரிசி கனம் ஆர்தர் ஐயரவர்கள் எழுதுகிறார்கள்

4 சாட்சியாபுரத்தில் சுயேட்சை ஊழியர் கூட்டம்

மார்ச்சு 12—14 தேதிகளில் நடைபெற்றது, சுமார் 20 பெண்கள் வந்திருந்தனர். கனம் ஸ்மித் அம்மாளும் கனம் ஹவர்த் அம்மாளும இக்கூட்டத்தை ஒழுங்குபடுத்தினர். வேதப்பாடசாலை கனம் உவைட் அம்மாளும், மதுரை வேதாகம ஸ்திரிகளின் தலைவர் கனம் தைரியம் அம்மாளும் பாடங்கள் நடத்தினர். வேத ஆராய்ச்சி, தியானம், சுவிசேஷ ஊழியம் ஆகியவற்றில் சிறந்த ஆவல்காட்டினர். தாங்கள் இருக்கும் சபைகளில் சுயேட்சையாய் ஊழியம் செய்ய வாக்களித்தனர். இது தொடர்ச்சியாய் நடைபெற்றுவர அங்குள்ள ஊழியர் முயற்சி செய்து வருகின்றனர்.

5. “சுகமளிக்கும் தெய்வகரம்”. என்ற தலைப்புள்ள புஸ்தகத்தைப்பற்றிய மதிப்புரையை போன சஞ்சிகையில் வெளியிட்டோம். அது மதுரை **Y.M.C.A.** கட்டிடத்திலுள்ள புஸ்தக டிப்போவிலும் கிடைக்கும்.

“இன்னிசை” என்ற தலைப்புடைய 60 பக்கங்கள் கொண்ட நூல் வரப் பெற்றோம். இசை, தாளம், ஸ்வரம், ஸ்ருதி, இராகம், மேளக்கர்த்தா முதலிய சங்கீதக் கலைக்குரியவைகளைப்பற்றித் தெளிவாய் இங்கு காணலாம். சங்கீதத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கும்

வனையோருக்கும் இப்புத்தகம் சிறந்த கைநூலாகும். குறைந்த விலையில் (6 அணு) இப்புத்தகத்தை அச்சிட்டு விநியோகம் செய்திருப்பது, அவர்கள் தமிழ் நாட்டிலும், தமிழ் சங்கீதத்திலும் கொண்டுள்ள அபிமானத்தைத் தெளிவுறுத்துகிறது. பிரதிகள் வேண்டியவர்கள், தைரியம் கன்செர்ன்ஸ், உரப்பனூர், திருமங்கலம் என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதம் அவசியமா?

(ஸ்ரீ ஏ. தானியேல், வேதபாடசாலை மாணவர், பசுமலை)

மதம் நம் வாழ்க்கையின் ஆதாரத்திற்கு அடிப்படை. உடலுக்குக் காற்று எப்படியோ, உயிருக்கு மதமும் அப்படியே. ஆனல்! மதவிரோதிகள் கூறுவது என்ன? மதம் மக்களை மயக்கும் அபினி; அநீதத்தின் அரசு, மதம் அதற்கு முரசு; மக்களைப் பிரிக்கும் தடுப்புச் சுவர், சிந்தனையின் சிறைக்கூடம், விதியை வளர்க்கும் வித்தியா பீடம், விஞ்ஞான விரோதி, பகுத்தறிவின் பகைவன், ஏழைகளை ஹிம்சிக்கும் எந்திரம், இல்லாததை இருப்பதாகக்கூறும் தந்திரம், முன்னேற்றத்தின் முட்டுக்கட்டை, மூடநம்பிக்கையின் மூடுதிரை என்ற பல குற்றங்குறைகளைக் கூறியும் எழுதியும் வருகின்றனர் மதவிரோதிகள். மதத்தைப்பற்றிய இவர்கள் கூற்றுக்கள் எதுகாறும் மெய், எதுகாறும் பொய் என்பதை ஆராய்வதே அறிவின் கடன்.

மதவிரோதிகள், மக்களை வாழ்விக்க வகுத்துள்ள மார்க்கம் எத்தன்மையது? வர்க்கமற்ற சமூகத்தை நாட்டல், மதசம்பிரதாயங்களை ஓட்டல், பகுத்தறிவையும் விஞ்ஞானத்தையும் மூட்டல், இம்மையிலேயே எல்லா இன்பங்களையும் ஊட்டல் என்பனவாம். மதவாதிகளாகிய ஆஸ்திகர் வீழவும், நாஸ்திகர் வாழவும் வேண்டுமாம். அப்படியானல் அவனியில் அடிமைத்தனத்தை அடியோடு வேரறுக்க அரும்பாடு பட்டு, தன் ஆருயிரையும் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கின ஆபிரகாம் லிங்கன் ஆஸ்திகரா? நாஸ்திகரா? இரவைப் பகலாக்க மின்சார விளக்கை இவ்வுலகிற்களித்த ஆல்வா எடிஸன் ஆஸ்திகரா? நாஸ்திகரா? பத்தாயிரம் மைலுக்கப்பாலிருந்துகொண்டு பைரவி ராகத்தில் பாடும் பண்ணிசை கேட்டு பலர் பரவசமடையுமாறு ரேடியோவை உதவிய மார்க்கோனி ஆஸ்திகரா? நாஸ்திகரா? வெறிநாய்க் கடியை விரைவாய்த் தடுக்க மார்க்கம் கண்ட பாஸ்டியர் ஆஸ்திகரா? நாஸ்திகரா? கத்தியின்றி, இரத்தமின்றி, கனத்தபீரங்கியின்றி அன்பு நெறியால் ஆங்கிலேயரை வென்று, சுதந்தரத்தை நமக்களித்த காந்தியடிகள் ஆஸ்திகரா? நாஸ்திகரா?

எனவே உலகின் உயர்வுக்கு ஊற்ருயிருப்பது மதமன்ரே? அது ஆதரவற்றவர்களுக்கு அடைக்கல நிலையம், அனுதைகளுக்கு ஆதரவு நிலயம், பிணியுற்ரேருக்கு பிரதிபலன் எதிர்பாராத பெரும் மருத்துவநிலயம் தெய்வபக்தியுள்ள சிறுபான்மையோரே உலகின் உயிர்நாடி, அவர்களே உலகின் ஒளி, அவர்களே உலகின் உப்பு, அவர்களே உலகின் உறைமோர். இதனை உணராது மதத்தைப் பழிப்பது மதியாகுமா? மதத்தைக் குறைகூறுவதை விட மதத்தின் அறநெறிகளை மதியாத மக்களைத் தான் நாம் குறை கூறவேண்டும்

மதவிரோதிகள் கூறுவது யாது? வயிற்றுக்கு உணவுவேண்டும், உடுத்தத் துணியும் வேண்டும், வசிக்க வீடும் வேண்டும்; அஃதுடன் உயிருக்கு உரிமையும் வேண்டும் என்பதே. இவற்றைப் பெற மதம் ஒரு சிறந்த சாதனம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. தலையில் பேன் இருப்பதற்காக தலையைத்துண்டிப்பாருண்டா? அழகிய ரோஜாவில் முள்ளிருப்பதற்காக அதை அழிப்பாருண்டா? அது போலவே மதத்திலுள்ள அறநெறிகளைக் கைக்கொள்ளாமலிருக்கிற மக்களுக்காக வேண்டி மதத்தைப் பழிப்பது மடமையன்ரே? மதானுஷ்டானங்களில் முக்கியமான அன்பு, பரிசுத்தம், பொறுமை, தாழ்மை, தயை, சாந்தம், இரக்கம் முதலிய மூலக்கருத்துக்களை விட்டுவிட்டுப் புறம்பானஆச்சாரங்களுக்குப் பலர் இடங்கொடுத்து வருவது மெய்யே. இப்படிப்பட்டவர்களைக் குறித்துத்தான் ஏசாயா, மீகா முதலிய ஆழ்வார்கள் கண்டனம் செய்து "மனுஷனே! நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிருர், நியாயம் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிருர்" என்று ஆணித்தரமாய்க் கூறினுரே. நமதருள் நாதரும் பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதன் கருத்து இன்னதென்று கற்றுக்கொள்ள ஏவினுரன்ரே?

விஞ்ஞானமா, மெஞ்ஞானமா எதுவேண்டும்? சிலர் விஞ்ஞானமிருந்தால் போதும், மெஞ்ஞானம் தேவையில்லை என்பர். அது தவறு. இரண்டும் வேண்டும். மதம் ஒரு மலர் போன்றது. அதன் மணமும், அழகும் எங்குள்ளது என்று சோதிக்க விஞ்ஞானம் பூவினைத் துண்டுதுண்டாகத்துண்டித்து ஆராய்கிறது. முடிவென்ன? மணமிருக்கு மிடத்தைக் காணமுடியவில்லை, அழகின் இருப்பிடத்தையும் காணமுடியவில்லை. பூ பாழானதுதான் கண்ட பலன். மதத்தை விஞ்ஞானம் மூலம் ஆராயத்துணிவது பசுவின் பால் இருக்குமிடத்தைக்காண பசுவைத் துண்டுதுண்டாக அறுப்பது போலல்லவா? மனம் அல்லது உயிர் எங்குள்ளது என்றுகாண உடலையே கூறு கூருக அறுப்பது போலல்லவா? ஆகவே ஆன்மவாழ்வின்

இரகசியங்கள் பூதக் கண்ணாடிக்கும், தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கும் தென்படா? அது தனியாள் சம்பந்தமானது மதப்பற்றுமிக்க காந்தியடிகள், ககாவா, தாகூர், ஆபிரகாம்லிங்கன், ஆல்பர்ட் ஸ்விட்ஸர் போன்றவர்கள் இவ்வுலகிற்களித்த நன்மைகள் அவர்களது சமயப்பற்றினாலல்லவா? இங்குள்ள மருத்துவ இல்லங்களும், அனாதை சாலைகளும், பள்ளிகளும், கல்லூரிகளும், ஊமையர் குருடர் பள்ளிகளும் யாரால் தோன்றின? அடிமை வாணிபத்தை அகற்றியது யாது? மகளிர்க்கு உரிமை தந்தது எது? நரமாம்ச பக்ஷணிகளை நல்லோராக்கியதும், திக்கற்றவரையும் தீண்டாதவரென்போரையும் திறம்பட உயர்த்தியதும் யாது? விஞ்ஞானமா? மெஞ்ஞானமா?

மாண்புமிக்க நம் தாய் நாடு அநேக மதங்களுக்குறைவிடம், நாயன்மாரையும், சித்தர்களையும், ஆழ்வார்களையும் பிறப்பித்த நன்னாடு, தேவதா பக்திபுடையவர்களையும், சமுதாய சேவை செய்பவர்களையும் ஈந்தளித்த பொன்னாடு, மதங்களில் நம்பவொண்ணாத அசமபாவிதமான கொள்கைகளைப் புகுத்தி, வணக்கத்திற்கு எவ்வகையிலும் லாயக்கற்ற கடவுள்களைக் கற்பனை செய்து, சடங்காச்சாரத்தால் கடவுளைத் திருப்தி செய்யலாமென்று சில சுயநலப்புலிகள் செய்த வஞ்சக சூழ்ச்சியினால் மதமே அவசியமில்லை என்பது நியாயமா? வீட்டில் எலி உபத்ரவமிருந்தால் அதைத்துரத்துவது தானே நியாயம்! அதற்காக வீட்டைக் கொளுத்துவாருண்டா? இது அறிவாளியின் செயலாகுமா? மதசம்பந்தமாய் மக்களின் சிந்தனையும், செயலும் இந்நாட்களில் எவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோமே; நம் மனப்பான்மை என்ன? நம் தாய்நாட்டு மக்களுக்கு மதம் அவசியம் என்பதை உணர்த்தும் கடமை நம்மேல் விழுந்த கடன் என்பதை உணருவோமா? மதத்தில் உண்மை வழிபாடு வேண்டும், மதத்தில் மக்கள் பால் இரக்கம் சுரக்கவேண்டும். மண்ணுலகில் விண்ணுலகம் பிறக்கவேண்டும், இந்த பித்தளையுலகு பிறங்கு பொன்னுலகமாகவேண்டும் என்று மக்களுக்கு எடுத்துரைப்போமா? இதுவே தற்போது நாம் நம் நாட்டிற்குச் செய்யும் சிறந்த சேவையாகும். நம் தமிழ் நாட்டுப்புரட்சிக் கவிஞரும், சிறந்த எழுத்தாளருமான பாரதி தாசன் மதத்தைப்பற்றிக் கூறுவது தான் என்ன? "காசினியில் கடவுளென்பார் கிறிஸ்தேசுவைப்போல் இருத்தல் வேண்டும், அஃதில்லாவிடில் இறைவன் என்ற பெயரையே ஒழித்தல் வேண்டும" எத்தனை அர்த்தபுஷ்டியுள்ள கவி! இந்த அரும் பெரும் பணியைப் பரிவோடு ஆற்ற பகவான் தாமே அருள்புரிவாராக!

பிரசங்கக் குறிப்புகள்

குருத்தோலை ஞாயிறு

சகரியா 9 : 9 ; ஏசாயா 62 : 11

1 கழுதைக்குட்டியைத் தமது வாகனமாகத் தெரிந்து கொண்டார்.

2. கழுதைக்குட்டி கட்டப்பட்டிருந்தது

3 கழுதைக்குட்டி இயேசுவைச் சுமந்தது

4 கிறிஸ்து எக்காலத்திலும் ராஜன்

இயற்கைமேல் (மத். 14 : 22-33)
அசுத்தஆவிமேல் (மாற்கு 5 : 1-29)
மரணத்தின்மேல் (யோவான் 11 : 17-44).

பெரியவெள்ளி

சிலுவையின் ஏழு வார்த்தைகள்

1.	முதல் வார்த்தை	லூக்கா	23 : 24.	மன்னிப்பின் சத்தம்.
2	இரண்டாம் ,,	,,	23 : 43.	இரக்கத்தின் சத்தம்.
3.	மூன்றும ,,	யோவான்	19 : 26	அன்பின் சத்தம்.
4	நான்காம் ,,	மத்	27 : 46.	மரணகிழலின் சத்தம்.
5	ஐந்தாம் ,,	யோவான்	19 : 39.	மனுஷீக சததம்.
6.	ஆறும் ,,	,,	19 : 39.	ஜெய சத்தம்.
7.	ஏழாம் ,,	லூக்கா	23 : 46.	ஜெப சத்தம்.

உயிர்த்தெழுந்த பண்டிகை

மாற்கு 16 : 6

1. வெற்றுக்கல்லறை உயிர்த்தெழுதலின் சாட்சி.
லூக். 24 : 1-6

2 உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் தரிசனம்.
மாற்கு 16 : 12-18
லூக்கா 24 : 13-32
யோவான் 20 : 19-20
,, 20 : 26-28
,, 21 : 5-6
1 கொரி. 15 : 7
அப். 9 : 4-6.

3. எக்காலத்திலும் எல்லா இடங்களிலும் தரிசனம் தருகிறார்.
லூக். 24 : 31, 36 ; யோவான் 20 : 19
மத் 28 : 30.

4. உயிர்த்தெழுந்த இரட்சகர் நமக்கு ஜெயம் கொடுக்கிறார்
சோதனைமேல் எபி 2 18
பாவத்தின்மேல் மாற்கு 9 : 24
மரணத்தின்மேல் யோவா. 15 25, 26
வெற்றி வாழ்க்கை நடத்த கொலோ. 3 : 1-5.

—(தேசோபகாரி)

சிறுவர் பாகம்

தினசரி ஜீவியத்திற்குரிய விதிகள்.

1. நாளை ஜெபத்துடன் துவக்கு.
2 வேதத்தில் சில வசனங்களை வாசி.
3 கடவுளிடம் நீ பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக அவரை ஸ்தோத்திரி.
4 நல்ல காரியங்களைப்பற்றிச் சிந்திப்பதில் உன் மனதைப் பழக்கு வீணாய் நேரத்தைப் போக்காதே
5. மற்றவர்களைப்பற்றித் தீதாய்ப் பேசாதே.
6 நீ வாசிக்கும் புஸ்தகங்களைப்பற்றிக் கவனமாயிரு. கிறிஸ்தவ ஜீவியத்தில் உன்னை பலப்படுத்தக்கூடிய புஸ்தகங்களை மட்டும் வாசி.
7 எப்பொழுதும் முகமலர்ச்சியோடிரு
8. ஒருநாளில் ஒருவரையாவது சந்தோஷப்படுத்து துக்கத்தில் அமிழ்ந்து கிடப்பவர்களுக்கு ஒரு அன்பான வார்த்தை சொல்

முன்னொருகாலத்தில் தேவபக்தியுள்ள மனிதன் ஒருவனிருந்தான். அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் அவனைப்போலவே தேவபக்தியுள்ளவர்களாயிருந்தார்கள் உலகப்பிரகாரமாக அவன் ஏழை. கிறிஸ்தவ ஜீவியத்திலோ உத்தமன். "கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ.3.12) என்ற வேதவாக்கியத்திற்கிசைய பல துன்பங்கள் அவனுக்கு உண்டாயின. அவனுடைய மனைவி வியாதிப்பட்டு

மரித்துப்போனாள். தான் குடியிருந்த வீட்டுக்கு வாடகை செலுத்த முடியாத வறுமையும் உண்டாயிற்று வீட்டுவாடகைப் பாக்கி அதிக மாயிற்று. வீட்டின் சொந்தக்காரன் ஒரு மாதம் தவணைகொடுத்து அத்தவணையில் பாக்கியைச் செலுத்தாவிடில் வீட்டைவிட்டு அவனை அப்புறப்படுத்தி, சிறையிலிடுவதாகப் பயமுறுத்திச் சென்றான். அந்த ஏழை மனிதன் என்ன செய்வான்? அவனுடைய முழுநம்பிக் கையும் கடவுள்பேரில்தான் "இரவும் பகலும்" அவரையே நோக்கிப் கூப்பிட்டான் (லூக் 18 : 7) தவணையின் நாள் நெருங்கினது. அவனு டைய இருதயங் கலங்கினது அவனுடைய கண்களோ அழுது அழுது சிவந்தன. "கர்த்தாவே நீர் எனக்குச் சகாயராயிரும" "எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்" என்று தன் இருதயத்தில் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் உதடுகள்மட்டும அசைந்து கொண்டிருந்தன. திடீரென ஒருபட்சி மற்றொரு பெரிய பட்சியினால் துரத்தப்பட்டு நொந்துபோன நிலைமையில் திறந்திருந்த வாசல் வழி யாகக் குடிசைக்குள்ளே விழுந்தது. அம்மனிதனின் கவனம் துன்பத்திலகப்பட்டு அடைக்கலமாகத் தன் குடிசைக்குள் வந்த பட்சியின்மீது சென்றது கதவைச் சாத்தினான், அவனுடையபிள்ளை கள் அப்பட்சியைப் பிடித்து அவனிடம் கொடுத்தார்கள். அவன் அதைத் தன்னிடமிருந்த ஒரு கூண்டில் அடைத்தான். அது காட்டுப் பட்சியல்ல, யார் வீட்டிலோ வளர்க்கப்பட்ட பட்சி. சிறிது நேரத்துக்குள் அது :—

" அஞ்சாதிரு, என் நெஞ்சமே
உன் கர்த்தர் துன்ப நாளிலே
கண்பார்ப்போம என்கிறார்;
இக்கட்டில் திகையாதிரு,
தகுந்த துணை உனக்கு
தப்பாமல் செய்குவார்" —பாமாலை 328

என்றபாட்டின் இராகத்தைப் பாடிற்று. இருதயங் கலங்கின நிலைமையிலிருந்த அம்மனிதனுக்கு அது சிறிது ஆறுதலையளித்தது. பட்சியைத் தேடிக்கொண்டு அத்தெருவின் பக்கமாக வந்த ஒருவன். பட்சியின் பாட்டைக் கேட்டவுடன், குடிசையினுட்சென்று, அப் பட்சி பட்டணத்தின் மற்றொரு பகுதியில் வசிக்கும் தனது சீமாட்டி யினுடையது என்று சொல்லவே அமமனிதன் அவனிடம் அப் பட்சியைக் கொடுத்துவிட்டான் சில மணி நேரங்களுக்குப் பின், அக் குடிசையின் கதவு தட்டப்பட்டது. கடனைப்பற்றிய விசாரத் தால் புண்பட்டிருந்த அந்த ஏழை மனிதனுடைய இருதயம வேதனை யடைந்தது வீட்டுக்காரன் தன்னை மறியல் செய்ய வந்துவிட்டா னுக்கும என்று நினைத்தான் கவலையுடன் கதவைத் திறந்தான். அங்கு நின்ற ஆள் வீட்டுக்காரன் அல்ல, பட்சியைத்தேடி வாங்கிக் கொண்டு போனவன். அவன் கையில் ஒரு கடிதம் இருந்தது.

வாங்கித் திறந்து பார்த்தான் கடிதம் கொண்டு வந்தவன்— "நீர் என் எஜமாட்டி அருமையாய் வளர்த்த பட்சியைப் பாது காத்துக் கொடுத்ததற்காக இதை நன்றியறிதலான வெகுமதியாக உமக்கு அனுப்பினுர்கள்" என்றுன் அவ்வேழை மனிதன் செலுத்த வேண்டிய வாடகைப் பாக்கிக்குச் சரியான தொகை அதனுள்ளிருந்தது. ஏழை மனிதனுக்குச் சொல்லிமுடியாத ஆறுதல். கர்த்தர் சகாயஞ் செய்தார். அப்பட்சியின் எஜமாட்டி அதன்பின் அம்மனிதனின் காரியங்களை அறிந்துகொண்டு, அனுதாபப்பட்டு அவனையும் அவனுடைய பிள்ளைகளையும் ஆதரித்தாள்.

இதை வாசிக்கும் ஆத்துமாவே! கடவுள் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிற நீயும் பலவிதத்தில் துன்பப்படலாம். அஞ்சாதிரு கர்த்தர் உனக்குச் சகாயஞ் செய்வார்.

—வேத ஆராய்ச்சி மாலிகை

இயேசுவின் ஜெபப்பள்ளி.

ஆறும் பாடம்.

உங்கள் பிதா தம்மிடம் கேட்கிறவர்களுக்கு நலமானவைகளைக் கொடுப்பது எவ்வளவு அதிக நிச்சயம்!

அல்லது

கடவுளின் கங்கு கரையற்ற கருணை

'தன்னிடம் அப்பத்தைக் கேட்கும் மகனுக்குக் கல்லைக் கொடுக்கும் மனுஷன் எவனாகிலும் உங்களில் உண்டோ? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பதுண்டோ? ஆகவே, நீங்கள் பொல்லாதவர்களாயிருந்தும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்க, பரலோகத்திலிருக்கிறவர்கள் பிதா தம்மிடம் கேட்கிறவர்களுக்கு நலமானவைகளைக் கொடுப்பது எவ்வளவு அதிக நிச்சயம்!' (மத். 7: 9-11)

ஜெபத்திற்கு நிச்சயமாய்ப் பதில் கிடைக்கும் என்று தாம் சொன்னதையே, இவ்வசனங்களின் மூலமாக உறுதிப்படுத்துகிறுர். சகல சந்தேகங்களையும் அகற்றவும், அவரது வாக்குத்தத்தம் எவ்வளவு உறுதியான ஆதாரத்தின்மேல் நிற்கிறது என்பதைக் காட்டவும், உலகில் யாவரும் கண்டதும் அனுபவித்ததுமான விஷயங்களையே எடுத்தாளுகிறுர். மக்கள் என்ற முறையில் நமது தந்தையரிடம் நாம் என்ன எதிர்பார்க்கிறேம் என்பது நமக்குத் தெரியும் தந்தையர் என்ற முறையிலும் நம் மக்கள் விண்ணப்பங்களுக்கு நாம் செவி கொடுப்பதையும் நாம் அறிவோம் இது உலகில் சருவ சாதாரணம். உலகில் சாலச்சிறந்த தந்தையருங்கூடக் கடவுள் பார்வையில்

பொல்லாதவரே. ஆகையால் பரமதந்தையானவர் தம்மிடம் கேட்பவர்களுக்கு நல்ல ஈவுகளைக் கொடுப்பது எத்தனை அதிகம் என்று நாம் கணிக்கும்படி தூண்டுகிறார் நமதாண்டவர் நம்மை. பாவியான மனுஷனைப் பார்க்கிலும கடவுள் எத்தனை பெரியவரோ அத்தனை பெரிதாய் அவர் அருள் செய்வார் என்கிற உறுதி நமக்கிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். மனிதனைப் பார்க்கிலும கடவுள் எத்தனை பெரியவரோ அத்தனை அதிக நிச்சயமாய் ஜெபம் கேட்கப் படும என்கிறார். பூலோகத் தந்தையிலும் மேலோகத் தந்தையின் பேரருள் எல்லையற்றதென்கிறார்

இவ்வுவமை எத்தனை எளியதாய், கருத்துக்குகந்ததாயிருக்கின்றதோ அத்தனைக்கத்தனை ஆழ்ந்த ஆண்மை போதனை அடங்கியதாயிருக்கிறது. உலகில் தந்தைக்கும் தனையனுக்கும் உள்ள தொடர்புக்கிசையவே தனயனின் விண்ணப்பமும அமையும் என்பதை நினைப்பூட்டுகிறார் நம் குருநாதர். வீட்டில் தந்தையுடன் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பையும், அன்பையும் தந்தைக்குத் தனயன் செய்யும சேவையையும் பொருத்தே விண்ணப்பமும் அமையும். 'கேளுங்கள் அப்பொழுது உங்களுக் கொடுக்கப்படும்' என்ற அவரது வாக்குத்தத்தத்தின் வல்லமை நமக்கும் பரமபிதாவுக்கும் உள்ள அன்புத் தொடர்பிலேயே விளங்கும் அத்தகைய தொடர்பில் நாம் ஜீவித்து அதிலேயே வாழ்க்கையை நடத்தும்போது விசுவாசமுள்ள ஜெபம் தான் விரும்பியதைப் பெறுவது இயற்கையாயமையும். ஆதலால் நாம் கற்றுக்கொள்ளும் பாடம் யாதெனில் கடவுளின் பிள்ளையாய் வாழ். அப்போதுதான் குழந்தையைப் போல ஜெபிக்க முடியும் குழந்தையின் வேண்டுதலைப் போல உன் ஜெபம் மிக நிச்சயமாய்க் கேட்கப்படும் என்பதே.

அப்படியானால் மெய்யான குழந்தை வாழ்க்கை யாவது யாது? எவ்வீட்டிலும இதற்கு விடை காணலாம். தகப்பனின் வீட்டை விட்டு விலகியும், தகப்பனின் பிரசன்னத்திலிருப்பதில் இன்புறாமலும், தகப்பன்மீதன்புகூராமலும், தகப்பனுக்குக் கீழ்ப்படியாமலும் இருக்கும் ஒரு குழந்தை தான் விரும்பியதைத் தகப்பனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நினைக்குமானால் அதன் எண்ணம் நிச்சயமாய் வீணாகும். அதற்கு மறுதலையாக, தகப்பனின் சித்தப்படி நடப்பதும், தகப்பனை மதிப்பதும், தகப்பனை நேசிப்பதும் ஆகியவையே வாழ்க்கையின் இன்பம் என ஒரு குழந்தை கருதுமானால், தகப்பனும் தான் விரும்புவதைச் சந்தோஷமாய்த் தருவார் என அதற்குத் தெரியும் 'கடவுளின் ஆவியால் நடத்தப்படுகிறவர்கள் எத்தனைபேரோ அவர்களே கடவுளின் பிள்ளைகள்' என்று சத்திய வேதாகமம் கூறுகிறது. ஆவியானவரின் செல்வாக்குக்குட்பட்ட சிறுபிள்ளை போன்ற வாழ்க்கையிலிருந்து சிறுபிள்ளையின் சிந்தையோடு கேட்கும் சிலாக்கியத்தைப் பிரிக்க முடியாது.

சிறு பிள்ளையின் சிந்தையோடு கேட்பதும், சிறுபிள்ளைபோல விசுவாசிப்பதுமடங்கிய சிறுபிள்ளை போன்ற வாழ்க்கையாவது யாது? என்பதை உய்த்துணர ஆண்டவர் மலைப்பிரசங்கத்தில் பரமபிதாவையும் அவரது பிள்ளைகளையும்பற்றிப் போதிப்பதைப் படிக்க வேண்டும். அதில் ஜெபவாக்குத்தத்தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை விதிகளுள் பொதிந்து கிடக்கின்றன. இவை ஒரே நாணயத்தின் இரு புறங்கள்போன்றவை. பிரிக்க முடியாதவை. அவ்வாழ்க்கைப் பிரமாணங்களை ஒப்புக்கொள்ளுகிறவனே அவ்வாக்குத்தத்தங்களுக் கருகதையுடையவன். மத்தேயு ஐந்தாம் அதிகாரத்தில் மூன்று முதல் ஒன்பது வசனங்களில் உலகில் பாக்கியவான்கள் யார் என்று விளக்குகிறார். சிறுபிள்ளைக்குரிய எளிமையும் (poverty) பரிசுத்தமும் பொருந்தியவரே, கடவுளுடையபுத்திரர் எனப்படுவார் என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறுகிறார். (1) அப்படிப்பட்டவர்களுக்கே 'கேளுங்கள் அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள்' என்று வாக்குச் செய்கிறார் (2) 'இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது' என்றபடி தங்கள் வெளிச்சத்தைப் பிறருக்குக் கொடுக்கிறவரே அவரது பிள்ளைகள் (மத் 5 : 16) என்கிறார். (3) அன்பின்வழியில் நடப்பவரே பரமபிதாவின் பிள்ளைகள். அவர்களுக்கே அவ்வாக்குத்தத்தம் என்கிறார். (மத் 5 : 38-44) (4) பரலோகத்திலிருக்கிற பிதா பூர்ணசற்குணராயிருக்கிறதுபோல பூர்ணசற்குணராயிருக்க நாடுகிறவர்களே அவர் புத்திரர் (5) மக்கள் முன்பல்லாது, அந்தரங்கத்தில் பார்க்கிற பரமபிதாவின் மகிழ்ச்சிக்கிசைந்த நோன்பும், ஜெபமும், தருமம் செய்தலும் பொருந்தியவரே அவரது மக்கள். (மத். 6 : 18) (6) பரமபிதா மன்னிக்கிறதுபோல பிறர் பிழைகளை மன்னிக்கிறவர்களே அவர் மைந்தர். (மத் 6 : 15) (7) கடவுளுடைய இராஜ்யத்திற்கும், அவரது நீதிக்கும் முதலிடம் கொடுத்து உலகுக்குரிய தேவைகளை வேண்டுகிறவர்கள் கடவுள் சுதர் (மத். 6 : 26 32) ஆண்டவரே ஆண்டவரே என்று உதட்டால் மட்டும் பூஜிக்காமல் பரமபிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்களே அவரது பிள்ளைகள். (மத் 7 : 21) இப்படிப்பட்டவரே பரமபிதாவின் அருமந்தப்பிள்ளைகள். பரமபிதாவின் அன்பிலும் பணியிலும இருப்பதே அத்தகையவர் வாழ்க்கை. இவ்விதமாகச் சிறுபிள்ளைபோன்ற சிந்தையும், எளிமையும், புனிதமும், விசுவாசமும் நிறைந்த வாழ்க்கையுடையவரின் ஜெபங்களுக்கே அபரிமிதமாகவும் நிச்சயமாகவும் பதிலருளப்படும என்று கூறுகிறார் நம் குருபரன்.

அப்படியானால், பலவீனமான ஒரு பக்தனை அது இளக்கரிக்கச் செய்யாதா? என்பது ஒரு கேள்வி. ஆண்டவர் எடுத்தாளும்

குழந்தை உவமானத்தில் குழந்தையின் இலக்கணங்கள் இவைதான் என்று கொள்வோமானல், மக்களுட் பெரும்பாலோர் நம்பிக்கையை இழக்க நேரிடாதா? என்பது மற்ருெரு கேள்வி பரமதந்தையைப் பற்றியும் பரமதந்தையின் பிள்ளையைப்பற்றியும் இன்னும் ஆழ்ந்து சிந்திப்போமாயின் இப்பிரச்சினைகளுக்கு விடை எளிதில் காணலாம் குழந்தை பலவீனமானதே. குழந்தைகளின் வயதிலும், அவர்கள் பெறும பல்வேறு ஈவுகளிலும் வேறுபாடுகள் உண்டு. மேலே கண்ட பிரமாணத்தை நாம் பூரணமாய் நிறைவேற்றுவதை ஆண்டவர் வற்புறுத்தவில்லே. ஆனல் சிறுபிள்ளையைப்போல முழு இருதயபூர்வமாக, முழுமனதார நம்மை அவருக்கு ஒப்புக்கொடுத்து, கீழ்ப்படிதலிலும், சத்தியத்திலும் அவரோடு ஒரு குழந்தையைப்போல் வாழ்வதையே வற்புறுத்துகிருர். இதற்கு மிஞ்சியதுமன்று; இதற்குக் குறைந்ததுமன்று அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது. பரமபிதாவிற்கு நம் முழு இருதயத்தையும் ஒப்புக்கொடுப்பதையே விரும்புகிருர். இப்படி நாம் ஒப்புக்கொடுக்கும்போதும், நம் ஜெபம் நேர்மையான தன் வாழ்க்கையை கடவுள் ஆவியே நடத்தும்படி ஒப்புக்கொடுக்கிறவன் அவனது ஜெபங்களிலும் ஆவியால் நடத்தப்படுவான். சிறு பிள்ளை போன்ற ஜீவியத்திற்கு தகப்பன்போல் அருள்வதே தெய்வீக விடை என்பதை அவன் கண்டுணர்ந்துள்ளங்குளிர்வான். ஜெபம் ஒரு நோக்கமுடையதாயிருப்பதை அவர் காணும்போதும், நாம் வேண்டுவதில் தளராத திடச்சித்தமுடையவராயிருக்கும் போதும், ஒரு சிறு பிள்ளையைப்போல வாழும்போதும்தான் நமது ஜெபம் ஒரு சிறு பிள்ளையின் ஜெபம்போல எண்ணப்படும். இதற்கு நாம் செய்யவேண்டியது யாது? மலேப்பிரசங்கத்தை உண்மையோடு தியானிக்கத் தொடங்குவோமாக. அதனை நம் வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொள்வோமாக. இவ்வாறு செய்வோமாயின் பலவீனங்களும், தோல்விகளும், நமக்கிருந்தபோதிலும்கூட, ஜெபம் கேட்கப்படும என்ற வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும்படி கேட்கும் உரிமை நாளுக்கு நாள் வளர்பிறைபோல வளரும் என்பதற்கெட்டுணையும் ஐயமில்லே என்பது கண்கூடு.

இப் பிரதான கருத்தினையே ஆண்டவர் இங்கு வற்புறுத்துகிருர் இதனை நாம் உணர்ந்து ஏற்றுக்கொள்வது நமது தலேசிறந்த கடனுகும். அவர் விரும்பும் வல்லமையுள்ள ஜெபத்தின் இலக்கணங்கள் யாவை? அவையாவன :—(1) கடவுளின் அன்பினை பரமதந்தையின் அன்பாகக்கொண்டு அதனுல் நமது இருதயம் நிரப்பப்பட்டிருக்கவேண்டும். (2) கடவுள் ஒரு தகப்பன் என்று நாம் அறிவது மட்டுமன்று, பரம தகப்பன் என்பதன் மெய்ப்பொருளையும் நாளாவட்டத்தில் அறியவேண்டும். (3) உலகில் நாமறிந்த ஒரு உத்தம தந்தையை எடுத்துக்கொள்க. அவன் தன் பிள்ளையின் வேண்டுதல்

களுக்கு எவ்வளவு அன்போடும் பட்சத்தோடும் செவிகொடுக்கிறான் என்பதைச் சிந்தனை செய்க. தகுதியான ஒவ்வொரு தேவையையும் எத்தனை அன்போடும் மகிழ்ச்சியோடும் கொடுக்கின்றான் என்பதை உணர்க. அதன்பின், கடவுளின் எல்லையற்ற அன்பினையும், பிதாத்துவத்தையும் ஆராதித்துத் தியானிக்கும்போது, அவர் எவ்வளவு அதிகமான பட்சத்தோடும் அன்போடும் இருகரம் கொண்டு நம்மை வரவேற்கின்றார் என்பதையும், நாம் கேட்கும் சரியான தேவைகளை எவ்வளவு அதிக மகிழ்ச்சியோடு அருளுகின்றார் என்பதையும் ஆராய்க. இந்தத் தெய்வீகக் கணிதம் நமது சிந்தைக் கெட்டாதது என்பதையும், நமது வேண்டுதல்களுக்குச் செவிகொடுக்க அவர் எவ்வளவு தயாராயிருக்கிறார் என்பது கிரஹிக்க முடியாதது என்பதையும் உணர்க. இவ்விதமாகப் பரம பிதாவின் அன்பின் அருட்சுடரை, நமது இதயகமலங்களில் பரிசுத்தாவி நிரம்பி நமது இதய தாமரைகள் மலருமாறு நாம் திறந்த இதயத்தோடு அவரண்டை சேர்வோமாக. (4) இதனை, நாம் ஜெபிக்கும் போது மட்டுமன்று, அவ்வொப்பற்ற அன்பில் நமது இதயமும் வாழ்வும் நிலைக்குமாறு நம்மை ஒப்புக்கொடுக்கும்போதும் செய்வோமாக. காரியமிருக்கும்போது மட்டும் நம் உற்றார் உறவினருடன் கடிதத் தொடர்பு வைத்துக்கொள்வதை அன்னவர் விரும்பார் அதுபோலவே தனக்குத் தேவையானதைக் கேட்க விரும்பும்போது மாத்திரம் ஒரு பிள்ளை தன் தகப்பனை நெருங்கினால் அது ஏமாற்றமடைய நேரிடும். (5) ஆனால் கடவுளைத் தனக்கு எக்காலத்திலும், எச்சமயத்திலும், எவ்விஷயத்திலும் தந்தையாகக்கொள்ளும் அடியான் எவனோ, பரம தந்தையின் திருச் சமுகத்தில் முற்றும் ஜீவிக்கிற அடியான் எவனோ, கடவுளின் வானப் பரப்பிலும், அண்டசராசரங்களிலும், மண்ணின் பரப்பிலும், கடற்பரப்பிலும், ஆகாய விரிவிலும் அதிகமான கடவுளின் அன்பினுக்கிடங்கொடுக்கும் அடியான் எவனோ அவனே ஜெபமும் பதிலும் ஒரே நாணயத்தின் இருபுறங்கள் என்பதை அனுபவித்து, ஆனந்தக் கடலில் மூழ்குவான்.

இராகம் சிம்மேந்திரமத்திமம். ('உலகினில் இன்பம்' என்ற எடுப்பு) தாளம்—ஆதி

பல்லவி

கடவுளின் அன்பிற் கிணையுண்டோ—அது
கண்ணிய தாய்தந்தை அன்பிலும் பெரிது (க)

அனுபல்லவி.

படிமிசை மனைவியின் அன்பிலும் பெரிது
பட்சமிக்க மக்களின் அன்பிலும் பெரிது (உ)

சரணங்கள்.

நண்பர் உறவினர் அன்பிலும் பெரிது
நலமிகும் ஆசிரியா அன்பிலும் பெரிது.
பண்புறு சோதரர் பாசத்திலும் பெரிது
பரவை வான் புவி யாவிலும் பெரிது (க)

2

அப்பா பிதா என்று அழைத்திடும்பேறு
அவர் சுதர்க்கல்லாது யார்க்குண்டு வேறு?
இப்பெரும் போதனை இயேசய்யன் அன்று
இரங்கி நமக்கே கற்பித்தார் நன்று (க)

இத்திருமந்திரத்தை எவனொருவன் இரவும் பகலும் இடையறாது உச்சரிக்கின்றானோ அவனே ஜெபத்தின் திறவு கோலையுடையவன் நோயுற்ற சேயராயினும் சரி, திடனற்ற பலமற்ற பாலராயினும் சரி, எப்படிப்பட்ட பிள்ளைகளாயிருந்தாலும் இரக்கமிக்க தகப்பன் தன் மக்களுக்குச செவிகொடாதிரான். எனவே கடவுளின் அருள் உள்ளத்தின் ஆழங்களை அறிவோமாக.

பாப்புவா மிஷனெரி சங்கம்

ஜனுவரி மாசம் 12-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை சென்னை பட்டணத்தில் நடந்த தென் இந்திய சபை சினட் மகா சங்கத்தில் செய்யப்பட்ட தீர்மானங்களில் ஒன்று, பாப்புவாவுக்கு இரண்டாம் மிஷனெரியை அனுப்பவேண்டும் என்பதே. இரண்டாம் மிஷனெரியை அனுப்பவேண்டும் என்னும் தீர்மானத்தைக்கொண்டு வந்த கமிற்றியார் கடந்த வருஷததில் அதிகமாக ஆலோசனை செய்து, தற்காலம் திருநெல்வேலியில், ஒரு பாஸ்டறேட்டில் ஊழியம் செய்து வரும் சங். ஜே. ற்றி. பவுல் மாணிக்கம் ஐயரின் பெயரை சினட் சங்கத்தில் சமர்ப்பித்தனர். சினட் சங்கம் அவரையும அவரின் மனைவியையும் அனுப்பத் தீர்மானித்தார்கள்.

சங். பவுல் மாணிக்கம் ஐயர் திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தைச்சேர்ந்தவர். பி.டி. பட்டம் பெற்றவர். திருமறையூர் வேதசாஸ்திரக் கலாசாலையில் படித்தவர். அவர் விவாகமாகி 2 குழந்தைகளுள்ளவர். அவருக்கு வயது 27 அவருடைய மனைவி மெற்றிகுலேற் பரீட்சை பாசாயிருக்கிறார்கள். அவர் வேதசாஸ்திரசாலைக்குப் போகுமுன் கிண்டி பாடசாலையில் மெக்கானிக்கல் பாடசாலையில் கற்றுவந்தார். திருநெல்வேலி அத்தியட்சர் இவரைப் பற்றி நற்சாட்சி கொடுத்திருக்கிறார்.

தற்சமயம், பாப்புவாவில் சங். சத்தியா ஜோசப் ஐயரும் மனைவியும் நல் ஊழியம் செய்துவருகிறார்கள். இன்னும் அவர்கள் 3 வருஷம் அங்கே ஊழியம் செய்வார்கள். நாம அனுப்பப் போகும் இரண்டாம் மிஷனெரியும் அவர் மனைவியும் 1955-ம் வருஷத்தில் அனுப்பும்படியாக சினட் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

இரண்டு மிஷனெரிமாரையும் அவர்கள் மனைவிகளையும் பாப்புவாவில் மிஷனெரி ஊழியத்தில் வைக்கவேண்டுமானால் 16,000ரூபாய் வேண்டும் என்று கணக்கிடப்படுகிறது. பின்வரும் தொகையை ஒவ்வொரு அத்தியட்சாதீனமும் 1954-ல் பிரித்து அனுப்பினால் மாத்திரம், இரண்டாம் மிஷனெரியையும் அவர் மனைவி பிள்ளைகளையும் பாப்புவாவுக்கு அனுப்பக்கூடும்.

			ரூ
1.	தென் திருவிதாங்கூர்	....	2,200
2	மத்திய திருவிதாங்கூர்	....	1,200
3.	வடசேகரம்	....	600
4.	கோயம்புத்தூர்	...	1,000
5	சென்னை	...	1,500
6	திருநெல்வேலி	....	1,200
7.	மதுரை-ராமனாட்	....	1,200
8	திருச்சிராப்பள்ளி	...	1,000
9.	தோர்ணக்கல்	....	750
10.	ராயலசீமா	....	1,500
11	மெடக்	...	1,000
12.	மைசூர்	...	1,200
13.	கிஷ்ணா-கோதாவரி	..	750
14.	யாழ்ப்பாணம்	..	1,000
		மொத்தம்	16,100

கி. மு. சங்கப் பொருட்கள்

ஏப்ரல், 1954

கிறிஸ்துவின் சீஷன்—பரிபூரண ஜீவியம்

உக்கிராணம்

ஏப்ரல் 1.	பரிபூரண வழிநடத்துதல்—		யோவான்	16 : 1-14
2	,,	மறுமொழி—	,,	16 : 15-24
3	,,	நம்பிக்கை—	,,	16 : 25-33
4.	நானே வாசல்—		,,	10 : 7-10

குருத்தோலை ஞாயிறு—இயேசுவே ராஜா எனப்பிரச்சாரப்படுத்து

5. யாக்கோபு, யோவானுடைய ஆசை—
மாற்கு 10 : 35-45
6. இயேசு பாலரை ஆசீர்வதித்தல்— „ 10 : 13 16
7. „ தமது மரணத்தை முன்னறிவித்தல்—
மாற்கு 10 : 32-34
8 பெத்தானியாவில் இயேசு— லூக்கா 10 : 38-42
9. சகேயுவே, கீழே இறங்கிவா — „ 19 : 1-10
10. இயேசுவின் தைலாபிஷேகம்—மத். 26 : 6-13
11 ஜெயப்பவனி— மாற்கு 11 : 1-11
12. அதிகாரமுள்ள நாள் மாற்கு 11 : 11-24
13. வாக்கு வாதம் நடந்த நாள் (செவ்வாய்)
மாற்கு 11 : 20-24
14. பெத்தானியாவில் இளைப்பாறிய நாள் (புதன்)
மாற்கு 14 : 1-11
15. கடைசி விருந்து நாள் (வியாழன்) யோவான் 13 : 31,
„ 17 : 26,
லூக்கா 22 : 7-20
16. விசாரணை, சிலுவையிலறையப்படல் (வெள்ளி)
லூக்கா 23 : 32-49
17. கல்லறையில் (சனி) மத். 22 : 62-66
18. அவர் உயிர்த்தெழுந்தார்! லூக்கா 24 : 1-12

19—25. கிறிஸ்துவின் தரிசனங்களும், பரமேறுதலும்
- மத். 28 : 9
- மாற். 16 : 21-18
- லூக். 24 : 13-32
- யோவா. 20 : 19-24
- „ 20 : 26-28
- „ 21 : 5-6
- „ 21 : 15-17
- 1 கொரி. 15 : 7
- அப் 9 : 4-6
- லூக்கா 24 : 50-53
- அப் 1 : 1-11

கிறிஸ்தவ இல்லம்

ஏப்ரல்	26.	ஜெபிப்பதெப்படி?	மத். 6 : 5-15
	27.	முழுக் குடும்பமும்	உபா. 16 : 6-12
	28.	தொழுகையின் காரணங்கள்.	அப். 17 : 22-31
	29.	ஆராதனையின் வீடு	II தீமோ. 1 : 3-6
	30.	பெத்தானியா வீட்டில் கிறிஸ்து.	யோவா. 11 : 1-44

தொழில் கற்பதற்கு அரிய சந்தர்ப்பம்

14 முதல் 18 வயது வரையுள்ள வாலிபர்கள் பின்வரும் தொழில்களைக் கற்கலாம்.

அச்சுவேலை, புஸ்தகம் கட்டுதல்
மின்சார, இயந்திர வேலைகள்
தச்சு வேலை

படிப்பு விபர விளம்பரத்திற்கு மதுரை ஜில்லா பசுமலைக் கைத் தொழில் பாடசாலை மானேஜருக்கு அணா 1 முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். சேர்க்கை விண்ணப்பம் ஜூன் மாதம் 15ம் தேதிக்குள் மானேஜருக்குக் கிடைக்கவேண்டும்

எல்லாத் தொழில்களையும படிக்கவேண்டிய காலம் 3 அல்லது 4 வருஷமாகும். படிப்பதற்குச் சம்பளம் கட்டவேண்டியதில்லை. எல்லா மாணவருக்கும் சம்பளம் கொடுக்கப்படும். தச்சுவேலை கற்பதற்குக் குறைந்தது 5-ம் வகுப்பாவது தேறியிருக்கவேண்டும். இயந்திரவேலை, மின்சாரவேலை, அச்சுவேலை பயில்வதற்கு 8வது வகுப்பு வரையிலாவது 3-ம பாரம் வரையிலாவது படித்த மாணவர்கள் முதலில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

உண்மையோடும் உற்சாகத்தோடும் வேலை செய்கிற தகுதியுள்ள எளிய மாணவர்களுக்கு, சம்பளத்துக்கு (Stipend) மேல் செல்லும் தங்கள் செலவைச் சம்பாதிக்கத் தோட்டவேலையாவது வேறு வேலையாவது கொடுக்கப்படும்.

தொழில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிழைப்பதற்கும் கடவுளுக்குத் தொண்டு செய்வதற்கும்
அதுவே சிறந்தவழி.

மதுரை ராமநாதபுரம் அத்தியட்சாதீனம்,
பசுமலை வேதபாடசாலை,
பசுமலை, மதுரை ஜில்லா,
ஏப்ரல் **15, 1954**

' 'A Class' சுயேட்சை ஊழியருக்கு அழைப்பிதழ்

வேதபாடசாலை, பசுமலை, மே **17—20, 1954**

அன்பார்ந்த நண்பர்களே,

உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறபடி நமது அத்தியட்சாதீனத்தின் ஏராளமான சபைகள் மேய்ப்பனின்றியும் ஞான ஆகாரமின்றியும் தத்தளிக்கிறார்கள். நமது அத்தியட்சாதீனத்தில் சுமார் 600 சபைகள் உள்ள கிராமங்கள் இருந்தும் ஒழுங்காய் ஆராதனை நடைபெறுவது சுமார் 350 கிராமங்களில மாத்திரமே. இப்பெருங் குறையை நிவிர்த்திக்கச் சுயேட்சை ஊழியராகிய நீங்கள் சேவை செய்ய முன்வந்ததுபற்றிக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறோம். உங்களுக்கும் அத்தியட்சாதீனத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1949—54ல் உங்களுக்காகப் பல இடங்களில் கான்பரன்ஸ் நடத்தினோம். போன மூன்று வருஷம் மே மாதத்தில் பசுமலையில் நடந்த கூட்டத்திற்கும் உங்களில் சிலர் வந்தீர்கள். இக்கூட்டங்களில் பங்கெடுக்காத ஏனைய நண்பரும் நமது பற்பல சபைகளில் ஆராதனை நடத்தி வருகிறார்கள். இப்படி ஒழுங்காய் ஆராதனை நடத்துவதற்குரிய சில பாடங்களையும், குறிப்புகளையும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். தொடர்ச்சியாய் இப்படிப்பட்ட பயிற்சி கொடுக்கும் நோக்கத்தோடு, உங்களுக்காக இந்த வருஷமும் மே மாதம் **17௳** *மதியம் முதல்* **20 ௳** *மதியம் வரை பசுமலையில் பொதுக்கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்திருக்கிறோம். வேதப்பாடசாலை ஆசிரியரும் கனம் அத்தியட்சரவர்களும் மற்றும் சில பிரமுகர்களும் உங்களுக்கு வேண்டிய பாடங்களைச் சொல்லித்தருவார்கள். இவ்வருஷப் பாடப் புத்தகமாக பரி. யோவான் சுவிசேஷத்தைப் படித்துக்கொண்டுவாருங்கள்.*

இக் கூட்டங்களுக்குரிய பிரயாணச் செலவை நீங்களே பார்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் சாப்பாடு வசதியைக் கூடுமான வரையில் நாங்கள் கவனித்துக் கொள்வோம்.

நீங்கள் வரும்போது வேத புஸ்தகம், புகழ்மாலை, 80 பக்க நோட்டு, பென்சில், படுக்கை, தமிளர் முதலியவை கொண்டுவரவும். ஆரம்பமுதல் கடைசிவரை இருக்கவும் வேண்டுகிறோம். வேத ஆராய்ச்சி, தியானம் முதலியவற்றோடு கீழ்க்கண்ட பாடங்களும் கற்பிக்கப்படும் :—

(1) *பழைய புதிய ஏற்பாட்டின் பெரியார் சரித்திரம்.*
(2) *கிறிஸ்தவ வணக்கம்*
(3) *திருச்சபைச் சரித்திரம்.*
(4) *கிறிஸ்தவ மதச் சித்தாந்தங்கள்.*

(5) பிரசங்கக் குறிப்புகள்.
(6) கிறிஸ்து சமையப் போதனைகளும் இதர மதங்களும்.
(7) சங்கீதம்.
(8) சுகாதாரப் பாடங்கள்.

தொடர்ச்சியாய் இப்பயிற்சியில் பங்குபெற்று ஒழுங்காய்ச் சபைகளில் சுயேட்சை ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கு அத்தியட்சருடைய லைசென்ஸ் வழங்கப்படவேண்டுமென்ற ஒழுங்கு ஆலோசனை செய்யப்பட்டு அமுலுக்கும் வந்துவிட்டது. லைசென்ஸ் பெற்றவர்களையும் இக்கூட்டங்களில் முக்கியமாய் எதிர்பார்க்கிறோம்.

இக்கூட்டங்களுக்கு நீங்கள் தயவுசெய்து வாருங்கள். எற்கனவே நீங்கள் வரும் தகவலை எங்களுக்குத் தெரிவித்தால், சாப்பாடு ஒழுங்கு செய்ய ஏதுவாகும். நீங்கள் வரும் தகவலைப்பற்றி உடனே பதில் எழுதக் கேட்கிறோம்.

கடவுள் உங்களோடுகூட இருப்பாராக!

இப்படிக்கு,

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்புள்ள ஊழியர்

லெஸ்லி நியூபிகின், அத்தியட்சர்.

A. சாமுவேல், வேதப்பாடசாலைத் தலைவர்.

Lenox Press, Pasumalai, 8—4—1954. 480 C.